**மதுரமுரளி** Rs. 5/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

| Regd. No. TN / PMG (CCR) / 521 / 03 - 05 | Licensed to Post without prepayment WPP No. 319/03-05 | |
|---|---|---|
| வேணு : 10 | மே - 2005 | கானம் : 10 |




ஸ்ரீ ராமகோடி அர்ச்சனை

பூர்த்தி விழாவில் ஸ்ரீ ஸ்வாமிஜி

இடம் : பெங்களூர் தேதி : 14.4.2005


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org;

e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org


ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள்


| வேணு : 10 | மே - 2005 | கானம் : 10 |
|---|---|---|

www.madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

தமிழ் புத்தாண்டு தினத்தன்று,
விஷுக்கனி தரிசனம்,
ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை
இடம் : மஹாரண்யம்
ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள்
திருக்கோயில்
தேதி : 14.4.2005







ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ சீதாகல்யாண
மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி
இடம் : அசோக் நகர், சென்னை.
தேதி : 27.4.2005







"யோகிராம்சுரத்குமார்
யோகிராம்சுரத்குமார்
யோகிராம்சுரத்குமார்
ஜெய குருராயா"
அகண்ட நாமசங்கீர்த்தன
பூர்த்தி விழாவில் ஸ்ரீ ஸ்வாமிஜி



கோகுலம் மண்டலியினர்
ஏற்பாடு செய்த
"ஹரே ராம.... " மஹாமந்திர
நாமகீர்த்தன ஸப்தாஹ
பூர்த்தி தினத்தன்று
ஸ்ரீ ஸ்வாமிஜியின்
அருளுரை
இடம் : ஸ்ரீநிதிஹால்,
நங்கநல்லூர், சென்னை.
தேதி : 14.4.2005

இடம் : ஸ்ரீ B.கபீர்தாஸ்
அவர்களின் இல்லம்
எண் : 1,
செம்பாக்கம் மெயின் ரோடு,
சென்னை – 600 073.
தேதி : 1.5.2005
நேரம் : காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணி வரை



ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 10 மே 2005 கானம் : 10

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 113 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 4 |
| 4. | வேதக் கதைகள் - 94 | 5 |
| 5. | மாதம் ஒரு புத்தகம் | 7 |
| 6. | எந்தரோ மஹானுபாவுலு - 85 | 8 |
| 7. | எல்லோரும் விரும்புபவனாகும் எளிய வழி | 11 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 88 | 12 |
| 9. | மாயச்சிரிப்பும் மந்திரப்ரயோகமும் (பைராகியும் பரமாத்மாவும் சென்ற இதழ் தொடர்ச்சி) | 14 |
| 10. | அதிமானுஷன் | 19 |
| 11. | மாலே மணிவண்ணா - 32 | 21 |
| 11. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 32 | 23 |
| 12. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 113 | 29 |


அதிஷ்ட்டாநீபூதம் தவ ஹ்ருதய யந்மாநுஷவபு:
யத்ருச்சாப்ராப்தம் த்வம் கிமிதி விபலம் நாம குருஷே ।
இதாநீமேதத்த்வம் விபலயஸி சேதீத்ருசமஹோ
கதா தே லப்யம் ஸ்யாதிதி விம்ருச கிஞ்சித் கருணயா ॥

ஏ மனமே! உனக்குத் தங்குவதற்கு இந்த மனித சரீரத்தில் இடம் தற்செயலாகக் கிடைத்திருக்கின்றது. இதை ஏன் வீணாக்குகிறாய்? இப்பொழுது இதை வீணாக்கினால் மீண்டும் மனித சரீரம் எப்பொழுது கிடைக்கும் என்பதைக் கொஞ்சம் ஆலோசித்துப்பார்!

— **குருக்ருபாவிலாஸம்,** முதல்பாகம்

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : ஆனந்த பைரவி தாளம் : ஆதி

*பல்லவி*

*தர்ஶனம் தேஹி தேவநாதா - தவ*
*தர்ஶனம் தேஹி தேவநாதா (தர்ஶனம்)*

*சரணங்கள்*

*கருடநதிதீர உல்லாஸவாஸ*
*கமலஆஸன பார்கவிநாயக*
*கருணாவீக்ஷண கமலவிலோசன*
*கனகாம்பரதர புவனஸுந்தர (தர்ஶனம்)*

*நிகமாந்ததேஶிக ஆஶ்ரிதசரண*
*நித்யமஹோத்ஸவ நிர்மலாகார*
*நிஜபக்திம்தேஹி தவசரணம்மே*
*நிதிம்மம வச: இதமேவ (தர்ஶனம்)*

*சந்த்ரகலாதர கமலஹஸ்த*
*ஶங்கசக்ரதர ஶ்யாமளவர்ண*
*மார்கண்டேயமுனி ஸேவிதசரண*
*முரளீதர ஜன்மஸ்தானதேவ (தர்ஶனம்)*

*நாமாவளி*

*தேவநாதா தேவநாத தேவநாதா பாஹிமாம்*
*தேவநாதா தேவநாத தேவநாதா ரக்ஷமாம்*

## 113

''வேதாந்த மார்க்கத்தைப் பின்பற்றி ஞான யோகத்தை அப்பியாஸம் செய்பவர்களுக்குப் பூரணமான வைராக்யம் தேவை. அவர்களுக்குப் பூரணமான வைராக்யம் இல்லாவிடில், அவர்களுடைய சாதனையில் முன்னேற்றம் ஏற்படாது. ஆனால், பக்தி மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களுக்கு, ஞானயோகத்தைப் பின்பற்றுபவர் அளவிற்கு அவ்வளவு வைராக்யம் தேவையில்லை. பக்தி மார்க்கமே ரஸரூபமானது. ரஸிக்கும் தன்மையை அடிப்படையாகக் கொண்டது.

வைராக்யம் என்ற பெயரில் ரஸிக்கும் தன்மையை இழந்துவிட்டால், பிறகு பூரண பக்தி செய்ய முடியாது. ஆகவே, லௌகீகர்களைவிட அதிக வைராக்யமும், ஞானமார்க்கத்தைப் பின்பற்றுபவர்களைவிடக் குறைந்த வைராக்யமும், அதாவது இது இரண்டிற்கும் இடைப்பட்ட வைராக்யம்தான் பக்தி மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களுக்குத் தேவையானது'' என்று ஸமீபத்தில் பகவத்கீதையில் பன்னிரண்டாம் அத்தியாயம் பக்தியோகத்தைப் பிரவசனம் செய்யும்பொழுது ஸ்ரீ ஸ்வாமிஜி கூறினார்கள். ரஸமாக இருப்பதால் இதை எழுதினேன்.

(தொடரும்) - **ஜயந்தி ஜானகிராமன்**

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhuramurali" every month in English / Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamiji's lectures / essays
5. Articles on religion, philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas and more.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : வியாதிகளைப் போக்குவதற்கு மந்திர சாஸ்திரங்களில் பலவிதமான மந்திரங்கள் கூறப்பட்டிருக்கின்றனவா?*

பதில் : ஆம்! கூறப்பட்டிருக்கின்றன.

*கேள்வி : மந்திரங்களால் எல்லாவிதமான வியாதிகளையும் போக்கிவிட முடியுமா?*

பதில் : வியாதிகளை மூன்று விதமாகப் பிரிக்கலாம். 'ஸாத்யம்' அதாவது மந்திரப்ரபாவத்தில் நூற்றுக்கு நூறு சரிப்படுத்திவிட முடியும். மற்றது 'அஸாத்யம்' அதாவது என்ன பரிகாரம் செய்தாலும் தீராது. மூன்றாவது 'யாப்யம்' அதாவது மந்திரத்தினால் ஒருவாறு கட்டுப்படுத்தி வைக்கலாமே தவிர, பூர்ணமாகக் குணம் ஆகாதது. இப்படிப் பார்த்துத்தான் மந்திர ரீதியான பரிகாரங்கள் செய்யவேண்டும். மந்திர சாஸ்திரங்களிலேயே இதைப் பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது.

*கேள்வி : வித்யை சொல்லித்தரும் குருவிற்கு என்ன ப்ரதி செய்ய வேண்டும்?*

பதில் : குருவிற்குக் கைங்கர்யம் செய்துதான் வித்யையைக் கற்க வேண்டும். அப்படி இல்லை என்றால், ஏராளமான தனம் கொடுத்து வித்யையைக் கற்க வேண்டும். அப்படியும் இல்லை என்றால் ஒரு வித்யையைக் கற்றுக்கொடுத்து மற்றொரு வித்யையைக் கற்கலாம் என்பது சாஸ்திரம்.

---

**ஸ்ரீ ஹரி:**

**<u>ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில், மஹாரண்யம்</u>**

பக்தர்களின் தரிசனத்திற்காக கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 4.30 மணி முதல் 11.30 மணி வரை
மாலை 3.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை

# வேதக் கதைகள்- 94

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஸ ஶாஸ்த்ரிகள்

## ஸ்வர்ண தக்ஷிணையின் பெருமை

முன்பு ஒரு சமயம், ப்ரஜாபதியானவர் ப்ரஜைகளை உண்டு பண்ண போகிறேன் என்று விரும்பி தவம் புரிந்தார். அப்போது அந்த ப்ரஜாபதியானவர், தான் விரும்பியதின் பயனாக தங்கத்தை உண்டு பண்ணினார். அந்த தங்கத்தை தன்னுடைய காரியம் சித்திப்பதற்காக அக்னியில் போட்டார். இந்த அக்னியில் போட்ட தங்கமும் ப்ரஜாபதியின் பொருட்டு காரியத்தின் தடங்கல்களை போக்கவில்லை. இவ்விதம் இரண்டு மூன்று தடவைகள் தங்கத்தை அக்னியில் போட்டும் அவர் விரும்பிய பயன் அவருக்கு கிடைக்கவில்லை.

அதற்குப் பிறகு, ப்ரஜாபதியானவர் தங்கத்தை வெளி அக்னியில் போடுவதைவிட்டு தன் உடலின் நடுவிலேயே ஹ்ருதய தாமரையின் அருகில் உள்ள யாவருக்கும் நன்மையை தருகிற வைச்வாநரம் என்ற ஜாடராக்னியில் போட்டார். அந்த தங்கமும் ஜாடராக்னியில் போடப்பட்டதாக இந்த ப்ரஜாபதியின் பொருட்டு அவர் செய்யும் காரியங்களில் தடங்கல்களை போக்கடித்தது.

இந்தக் காரணத்தால் வெளியில் போடப்பட்ட தங்கமானது ஒரு பயனையும் உண்டுபண்ணாமல் ஜாடராக்னியில் போடப்பட்டதாக பயனை அளிப்பதாக ஆயிற்றோ! அதனால் உலகத்தில் தங்கமானது வெளிப்பிரதேசத்தில் தரை, பெட்டி இவைகளில் வைக்கப்பட்டதாக போகத்திற்கு பயன்படாததால் செல்வங்களுக்குள் கீழ்பட்டது என்று கூறப்படுகிறது.

எந்த தனம் போகத்திற்கு உபயோகபட்டதாக ஆபரணமாகவும் அன்னம் முதலியதாக ஆகிறதோ அந்த செல்வமே எல்லா பிராணிகளுக்கும் மிகவும் விரும்பபட்டதாக ஆகிறது. இதனால், ப்ரஜாபதியின் ஹ்ருதயத்திலிருந்து

உண்டானதாக அனுபவிப்பவர்களுக்கு ஹ்ருதயத்தில் மகிழ்ச்சி அளிப்பதாக மிகவும் விரும்பிய பொருள் என்பது பொருத்தமாகிறது.

முன் கூறியபடி அறிவு உள்ளவர்களிடத்தில் கொடுக்கப்பட்ட தங்கமானது மிகவும் ப்ரியமானது ஆகிறது என்று ஆலோசித்து எந்த அறிவாளிக்கு தங்கரூபமான தக்ஷிணை கொடுக்கபடுகிறதோ அந்த அறிவாளி தங்கம் அடைந்து வேறு மனிதனை அடையாமல் தன்னுடைய வலது கையிலேயே தங்கத்தை வைத்துக்கொண்டான். வலது கையில் தங்கத்தை வைத்து, ''ஓ தங்கமே! தக்ஷிணையாக என்னால் தரப்பட்டு ஹாரங்களை செய்வதில் திறமையான எனக்காக உள்ளே பெற்றுக்கொள்கிறேன்'' என்று கூறி ப்ரஜாபதியும் அந்த தக்ஷிணையை வலதுகையால் பெற்று கொண்டார்.

அது முதற்கொண்டு ப்ரஜாபதியானவர் காரியங்களைச் செய்வதில் திறமை உள்ளவராக ஆனார். மற்றவரும் இந்த தங்கத்தின் வரலாறு அறிந்தவர்களாக தங்கத்தை பெற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் காரியங்களை திறமையுடன் செய்வார்கள்.

அதிகமாக அன்னதானம் செய்து அதனால் புகழ்பெற்றவர் வாஜஷ்ச்ரவா: என்ற மஹரிஷி ஆவார். அவர் பிள்ளைக்கு வாஜஷ்ச்ரவசர் என்று பெயர் அவர்கள் கௌதம கோத்திரத்தில் பிறந்ததால் கௌதமர்கள் என்று அழைக்கபடுகிறார்கள். தக்ஷிணை இருவிதம் என்று கூறப்பட்டுள்ளது. சயனத்தில் ஒவ்வொறு கல்லிற்க்கும் தக்ஷிணை கொடுக்க வேண்டும் அதுவும் தங்கம் கொடுக்க வேண்டும் என்று நேரடியாக கொடுப்பது ஒரு வகை. தேவதைகளுக்கு அளிப்பது ஒரு வகை - மறைமுகம்.

மறைமுகமாக அளித்தாலே மகிழ்ச்சி ஏற்படும்பொழுது நேரடியாக கொடுத்தால் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும். ஆதலால், எல்லா காரியங்களிலும் தங்கத்தை தக்ஷிணையாக கொடுப்பது மிகவும் உயர்ந்ததாக ஆகிறது. இவ்விதம், இந்த வரலாற்றை எவன் அறிந்து கொள்கிறானோ அவன் செய்யும் காரியங்களுக்கு நல்ல பயனை அளக்கும் என்பது நம்மால் அறியப்படுகிறது.

# மாதம் ஒரு புத்தகம்

நூலின் பெயர் : ஸ்ரீ குருக்ருபா விலாஸம்''

எழுதியவர் : பாகம் 1 - ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள்
பாகம் 2 - ஸ்ரீ ஞானாநந்தபாரதீ ஸ்வாமிகள்

வெளியிட்டோர் : சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் பக்தர்கள்

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் பக்தர்கள் வெளியிட்டுள்ள புதிய பதிப்பான ''ஸ்ரீ குருக்ருபா விலாஸம்,'' இரண்டு பாகங்களை உடையது. ஸ்ரீ ஞானாநந்தபாரதீ ஸ்வாமிகளால் எழுதப்பட்டது. இவ்விரண்டு புத்தகங்களும் ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய மஹிமைகளை எடுத்துக் காட்டும் கட்டுரைகளின் தொகுப்பு. ஆன்மீக சாதகர்கள் இந்தப் புத்தகத்தை படிப்பார்களானால் அவர்களுக்கு சாதனைகளில் மேலும் ஒரு உற்சாகத்தை இது கொடுக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இந்தப் புத்தகங்களில் காணப்படும் ஒரு சுவாரஸ்யமான சம்பவத்தை பார்ப்போம்.

ஒரு சமயம், ஒருவருடைய நகைகள் காணாமல் போய்விட்டன. அதற்காக மிகவும் வருத்தமடைந்து ஆச்சார்யாளைத் தஞ்சம் அடைகின்றார்கள். அவருக்கு ஒரு மந்திரத்தை உபதேசம் செய்து, ''இதை ஆயிரத்து எட்டு முறை சிரத்தையுடன் ஜபம் செய்யவும். சரியாக ஜபம் முடியும்பொழுது, வீதியில் யார் உங்கள் கண்களில் முதன்முதலாகப் படுகின்றார்களோ அவரைத் தொடர்ந்து செல்லவும். அவர் எவ்வளவு தூரம் சென்றாலும் சளைக்காமல் அவரைத் தொடர்ந்து செல்லவும்'' என்று அனுக்ரஹிக்கின்றார்கள். அதுபோல் அவரும் ஆயிரத்து எட்டு முறை ஜபம் செய்து, முடியும் பொழுது வீதியில் ஒருவர், கண்களில் படுகின்றார். அவரைத் தொடர்ந்து செல்கின்றார். அவர் வெகுதூரம் செல்ல, இவரும் விடாமல் தொடர்ந்து செல்கின்றார். கடைசியில் ஒரு வயல் வெளியில்போய் அவர் நிற்கின்றார். அந்த வயல்வெளியில், தான் புதைத்து வைத்த நகையை எடுக்கின்றார்! பார்த்தால், இவர் தொலைத்த நகை அதுவாகவே இருக்க, அவரிடமிருந்து அந்த நகையை மீட்டு ஆனந்தமடைகின்றார்கள்!

இந்த சம்பவத்திலிருந்து நமது வேத சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள மந்திரங்களுக்கு உள்ள சக்தியையும், அதையும் அப்பேர்பட்ட மஹாத்மாவிடமிருந்து உபதேசமாகப் பெறும்பொழுது அது எத்தகைய பலனைத் தருகின்றது என்பதை நினைத்துப் பார்த்து, வியக்காமல் இருக்க முடியவில்லை.

**— டாக்டர் ஆ. பாக்யநாதன்**

## எந்தரோ மஹானுபாவுலு - 85

சாந்திபூரில் அத்வைதாசார்யரின் மனைவி சீதாதேவி, நொடிப்பொழுதில் விதவிதமான பக்குவங்களுடன் மஹாப்ரபுவிற்காக உணவு தயாரித்துவிட்டாள். பல பெண்கள் சேர்ந்து பல நாட்கள் செய்தாலும் தயார் செய்ய முடியாத அளவு உணவு வகைகளை அவள் ஒருத்தியே உத்ஸாஹத்துடன் செய்துவிட்டாள்! அறுசுவை நிரம்பிய பல பதார்த்தங்கள்! இருபது வகைக் காய்கறிகள்! ஒரே காயில் பல வகைகள் என்றும், விதவிதமான பாயஸங்களும் செய்து வைத்தாள். பகவானுக்கு நைவேத்யம் செய்துவிட்டு, ப்ரபுவைப் பிக்ஷை எடுத்துக் கொள்ளுமாறு ப்ரார்த்திக்கொண்டனர்.

மஹாப்ரபுவிற்கு இரண்டு ஆசனங்கள் அளித்து, அவரைக் கையைப் பிடித்து அத்வைதாச்சாரியர் உணவு உண்ண அமர்த்தினார். இத்தனை உணவு வகைகளைப் பார்த்து ப்ரபு, ''எந்த க்ருஹத்தில் இப்படி அழகாக விதவிதமான உணவு வகைகள் நித்யமும் பகவானுக்கு சமர்ப்பிக்கப்படுகிறதோ அந்த வீட்டிலுள்ளவர்களின் சரணதூளியால், பாபிகூடப் பவித்ரமாகிவிடுவான். 'சீதா மாதா சாக்ஷாத் அன்னபூரணி தேவிதான்!' அவனது வீட்டு வாசலில் சதாசிவன் தனது பிக்ஷை ஓட்டைக் காண்பித்துக்கொண்டு நிற்கிறான்'' என்றார்.

ஆசார்யர் சிரித்துக்கொண்டே, ''சிவனும், விஷ்ணுவின் உதவியால்தானே அன்னபூரணிதேவியை அகஸ்திய சாபத்திலிருந்து காப்பாற்றினார். அவளுக்கு எத்தனை விதமாகச் சமைக்கத் தெரிந்தும் என்ன பயன்?'' என்றார்.

இந்தக் கதையைக் கொஞ்சம் பார்ப்போம். ஒரு நாள் பார்வதி, தான் செய்துவரும் ஒரு வ்ரதத்தின் அங்கமாக ஒரு யோக்யமான ப்ராஹ்மணனுக்குப் போஜனம் செய்விக்க விரும்பினாள். அகஸ்தியருக்குப் போஜனம் செய்விக்கலாம் என நினைத்து, தன் இச்சையைத் தேவாதிதேவனான மஹாதேவனிடம் தெரிவிக்க, அவர் உடனே தம் காதுகளைப் பொத்திக்கொண்டு ''அப்பப்பா! அகஸ்தியரின் வயிற்றை யாரால் நிரப்ப முடியும்? தேவி! இந்த ஆசையை விட்டுவிடு! வேறு யாராவது ப்ராஹ்மணனைப்

போஜனத்திற்கு அழை'' என்றார். ஜகன்மாதா பார்வதிக்குத் தன் சக்தியில் அபார நம்பிக்கை. சற்றுப்பெருமையுடன், ''என்னால் அகஸ்தியருக்கு உணவு தயாரிக்க முடியாதா என்ன? அவர் எவ்வளவு உண்பாரோ அதை நானே தயார் செய்வேன்'' என்று பதில் கூற, சிவனும், ''தேவி! உன்னுடைய அடத்தை விட்டுவிடு. அகஸ்தியர் வடவாக்னியின் அவதாரம். அவரைத் திருப்தி செய்விக்க முடியாது. வேறு எத்தனையோ ஞானி, தபஸ்வி, ரிஷி, மகரிஷிகள் உள்ளனரே. யாரையாவது அழையேன்!'' என்றார்.

உலகில் குழந்தையின் அடமும், ஸ்தீரியின் அடமும் பிரஸித்திப் பெற்றது அல்லவா? தேவி விடவில்லை. தன் விருப்பத்தை மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை. கடைசியில் மஹாதேவன், ''சரி உன்னிஷ்டம்; நீயே எல்லாம் சமைத்து வை. என்னை இழுக்காதே. நீ சொல்கிறாயே என்று நான் அவரை அழைத்துவிட்டு வருகிறேன்'' என்ற கூறி அகஸ்தியரை அழைத்து விட்டுவந்தார்.

சரியான சமயத்தில் அகஸ்தியர் வந்து சேர்ந்தார். பார்வதி தேவியும் ஆயிரக்கணக்கான யக்ஷ, கின்னர, தேவதாஸ்த்ரீகளின் உதவியுடன் விதவிதமான உணவுகளைச் சமைத்து வைத்திருந்தாள். அகஸ்தியர் உணவு உண்ண அமர்ந்தார். தன் எதிரில் வைத்த எந்த உணவையும் ருசி பார்க்காமல், ''ஸ்வாஹா'' என்று உள்ளே ஏற்றுக்கொண்டார். கண்மூடித் திறப்பதற்குள் எதிரில் வந்த அத்தனை உணவையும் கபளீகரம் செய்தார். பார்வதிதேவி பதற்றமடைந்தாள். முதலில் வெட்கத்தால் சிவனிடம் ஒன்றும் கூறவில்லை! நேரம் ஆக ஆக, பீதியடைந்து கணவனைத் தஞ்சமடைந்து தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினாள்.

சிரித்துக்கொண்டே சிவனும், ''தேவி! நான்தான் முதலிலேயே சொன்னேனே! நீ எத்தனை உணவளித்தாலும் இந்த மஹாத்மா திருப்தி அடையமாட்டார். திருப்தி அடையாமல் எழுந்திருக்கவும் மாட்டார். திருப்தி அடையாவிட்டால் சபித்து வேறு விடுவார். இவரை ஏதாவது சூழ்ச்சி செய்துதான் எழுப்ப வேண்டும். இந்த மாயாஜால வேலையில் விஷ்ணுதான் சிறந்தவர். நான் அவரிடமே செல்கிறேன்'' என்று கூறி விஷ்ணுவிடம் சென்றார்.

நடந்த விபரத்தை அறிந்துகொண்டு விஷ்ணுபகவான் சிரித்துக் கொண்டே, ''பார்வதிதேவி என்னை அழைக்கவில்லை. ஆபத்துச் சமயத்தில் என்னைக் கூப்பிடுகிறீர்கள்! சரி, பரவாயில்லை! எனக்கும் போஜனம் செய்து வையுங்கள். நான் வருகிறேன்'' என்றார்.

மஹாதேவனும், ''பிரபோ! ஒரு ப்ராஹ்மணனுக்கே இன்னும் சரியாகப் போஜனம் செய்துவைக்கவில்லை. முதலில் எங்களை இந்தச் சங்கடத்திலிருந்து எப்படியாவது விடுவியுங்கள்'' என்று கூறினார். பகவானும் சிவனின் அழைப்பை ஏற்று வந்து அகஸ்தியருடன் சமபந்தியில் அமர்ந்து உணவு பரிமாறச் சொன்னார். சிறிது உணவு அருந்தியவுடன், தடாலென்று பகவான் எழுந்து கொண்டார். பந்தியில் ஒருவர் எழுந்துவிட்டால் மற்றவரும் உணவு உண்ணாமல் எழுந்துவிட வேண்டும் என்பது நீதி சாஸ்திரம். எனவே வேறு வழியில்லாமல் அகஸ்தியரும் எழுந்துவிட வேண்டியதாயிற்று.

அகஸ்தியர், பகவானிடம் கோபமாக, ''இப்படிப் பாதியில் எழுந்துவிட்டீரே! என் வயிறு நிறையவே இல்லை! நீங்கள் செய்தது சரியில்லை! எனக்கு அருந்த நீராவது தாருங்கள்! என்றார். பகவானும் கைகூப்பி, ''தயை செய்யுங்கள். உங்களுக்கு எப்படியோ குறைவாகவோ நிறையவோ போஜனம் செய்து வைத்துவிட்டோம். உங்களுக்குத் தாகம் தணியுமளவு நீர் அளிக்கும் சாமர்த்தியம் எங்களுக்குக் கிடையாது. நானே உங்களுக்கு எப்பொழுதாவது நீர் தருகிறேன்'' என்று வாக்களித்தார். இந்த வாக்கைப் பகவான் ஸமுத்ர ஜலம் முழுவதையும் அகஸ்தியருக்கு அளித்து நிறைவேற்றினார்.

இப்படி ஒரு ரசமான கதையை நினைவுகூறி ஆசார்யர், மஹா ப்ரபுவை விஷ்ணுவாகவும், சீதாதேவியைப் பார்வதியாகவும், நித்யானந்தரை அகஸ்தியராகவும் **பா**வித்து, தங்களை நித்யானந்தரிடம் இருந்து காக்க வேண்டும் என்று ஹாஸ்யமாக உணர்த்தினர்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

# எல்லோரும் விரும்புபவனாகும் எளிய வழி!

— ஸ்ரீ ஸ்வாமிஜி

கலைஞர்களையும் அவர்களுடைய கலையையும் பிரித்து யாராலும் பார்க்க முடிவதில்லை. ஒரு பாடகர் நன்றாகப் பாடும்பொழுது அதுவும் அவர் அபாரமாகப் பாடும்பொழுது கேட்டு ரசிக்கும் ரசிகனுக்கு அவருடைய பாட்டு மட்டும் பிடிப்பதில்லை! அவரையும் சேர்த்துப் பிடித்து விடுகின்றது. மிகவும் அருமையாக அவர் பாடும்பொழுது ஓடிச்சென்று அவரைக் கட்டிக் கொள்ளலாமா என்று நினைக்கிறான். அவர் மீது அன்பு வைக்க ஆரம்பித்து விடுகின்றான்.

இதுபோல், விளையாட்டு ரசிகர்களும் ஆட்டம் ஆடுபவரின் விளையாட்டை ரசிப்பதோடு மட்டும் அல்லாமல் அந்த விளையாட்டு வீரர்களையே ரசிக்க ஆரம்பித்து விடுகின்றனர். சினிமாப் படங்களில் நடிக்கும் கலைஞர்களின் படங்களைப் பலர் வீட்டில் மாட்டி வைத்துக்கொள்கின்றனர். பலர் கஷ்டப்பட்டுக் கடுமையாக உழைத்து அல்லது கடன் வாங்கி ஆட்டோ வாங்குகின்றனர். அதற்குத் தன் பெயரையோ, தன் மனைவியின் பெயரையோ, தன் குழந்தைகளின் பெயரையோ வைப்பதில்லை. தனக்குப் பிடித்த கலைஞர்களின் பெயரையே வைப்பதைப் பார்க்கின்றோம்.

இதே போல்தான் நாம் எப்பொழுதும் முகத்தைக் கோபமாகவோ, சோகமாகவோ வைத்துக்கொண்டோமானாலும் அல்லது மற்றவர்களுக்கு பிடிக்காத, கசப்பான, கடுமையான வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருந்தோமானால் நாம் சொல்லும் விஷயம் மட்டுமல்லாமல் நம்மையும் பிடிக்காமல் போய்விடும்!

எப்பொழுதும் முகத்தைப் பிரஸன்னமாக வைத்துக் கொண்டு இனிமையான வார்த்தைகளையும், பிறர் மனம் நோகாதபடியும் பேசுவோமானால், நாம் சொல்கின்ற விஷயத்தோடு மட்டுமல்லாமல் நம்மையும் எல்லோரும் மிகவும் விரும்ப ஆரம்பித்துவிடுவார்கள்.

## பாலகர்களுக்கு ஒரு கதை - 88

ஒரு காலத்தில், பஞ்சாப் தேசத்தில் ஹோஷியார்பூர் என்னும் இடத்தில் ஒரு பெரிய மஹாத்மா ஆஸ்ரமம் அமைத்து வாழ்ந்து வந்தார். அவர் சித்தியான பிறகும் கூட அந்த ஆஸ்ரமம் மிகவும் நல்லமுறையில் இயங்கி வந்தது. அந்த ஆஸ்ரமத்தில் அறுபது சந்யாசிகளும் நூற்றுக்கணக்கான ப்ரஹ்மசாரிகளும் இருந்தார்கள். சில காலத்தில், அந்த ஆஸ்ரமம் மங்க ஆரம்பித்தது. அங்குள்ளவர்களுக்குள் கருத்து வேறுபாடு தோன்றியது. ஒவ்வொருவரும் மற்றவர்களை வெறுத்து, பொறாமையினாலும், பதவியாசையினாலும் சண்டையிட்டுக்கொண்டார்கள். ஒழுக்கமற்ற நிலை நிலவி, கடைசியில் எல்லா ப்ரஹ்மசாரிகளும் பெரும்பாலான சன்யாசிகளும் அந்த இடத்தை விட்டுச் சென்றுவிட்டார்கள்.

அதனால், அந்த ஆஸ்ரமத்திற்கு வந்து போகும் பக்தர்களின் எண்ணிக்கையும் குறைய ஆரம்பித்துவிட்டது. ஒரு கால கட்டத்தில் பதிமூன்று சன்யாசிகள் மட்டுமே இருந்தார்கள். அவர்களுக்கு ஆஸ்ரமத்தின் எதிர்காலம் பற்றி ஒரு கவலை இருந்தது. அவர்களுள் தலைமை பீடத்தில் உள்ளவர், ஹரித்வாரில் உள்ள ஒரு பிரபலமான மஹானை அணுகி அவரிடம், ''ஸ்வாமிஜி அவர்களே! இந்த அளவிற்கு ஆஸ்ரமம் கீழே போவதற்கு நாங்கள் என்ன பாவம் செய்தோம் என்பதைக் கூறுங்கள். அந்த பாவங்கள் போவதற்கான வழியையும் கூறுங்கள். அதனால், பொலிவான ஆஸ்ரமம் அமைத்து முன்போல் பழைய நிலைக்கு திகழலாம்'' என்று வேண்டினார்.

அந்த மஹான் சற்றுநேரம் தியானித்து, வந்தவரைப் பார்த்து, ''அதிர்ஷ்டவசமாக பகவான் விஷ்ணுவே உங்கள் ஆஸ்ரமத்தில் உங்கள் ஒருவரில் பிறந்திருக்கிறான். அவர், உங்கள் ஆஸ்ரமம் மேல்நிலைக்கு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்வார். ஆனால், தான் யார் என்பதை யாருக்கும் தெரிவிக்க அவர் விரும்பவில்லை. நீங்கள் உங்கள் ஆஸ்ரமம் திரும்பலாம். பகவான் உங்களுடன் இருப்பாராக'' என்று கூறினார்.

அந்த தலைமை சன்யாசியோ, அந்த பதிமூன்று சன்யாசிகளில் பகவான் அவதாரமாகி யார் இருக்கமுடியும் என்று ஆலோசித்தார். அவர் கணக்கிற்கு யாரும் வரவில்லை. எல்லோரையும் ஏதோ ஒரு காரணத்திற்காக ஒதுக்கினார். பிறகு மேலும் யோசிக்கையில், ''கடவுள் வேண்டும் என்றே சாதாரண மனிதனாக, எல்லா குறைகளும் உள்ளவனாக தன்னைக் காட்டிக்கொண்டிருக்கிறான்'' என்ற முடிவிற்கு வந்தார். தன் ஸக ஸந்யாசிகளைக் கூப்பிட்டு ஒரு கூட்டம் ஏற்பாடு செய்தார். ஹரித்வாரில் நடந்த ஸம்பவத்தை கூறினார்.

தற்பொழுது ஒவ்வொரு ஆஸ்ரம ஸந்யாசியும் தங்களுள் யார் அந்த பகவானின் அவதாரம் என்று தெரியாமல் குழம்பினர். அன்று முதல் ஒவ்வொருவரும் மற்றொருவரை அன்புடன் நடத்தி வந்தனர். யார் அந்த கடவுள் என்று தெரியாததால் எல்லோரையுமே கடவுளின் அம்சமாக நினைத்து நடந்து கொண்டார்கள்.

அவர்களுக்குள் எந்த குழப்பமும் இல்லை. மனக்கசப்பும் இல்லை. சண்டையில்லை; சச்சரவு இல்லை. பகவானிடம் நல்ல பெயர் வாங்கவேண்டுமே என்ற ஒரே குறிக்கோளில் ஒவ்வொருவரையும் கடவுளாகவே பார்த்தார்கள். கடவுளையே கண்டார்கள். அவர்களுக்குள் ஒற்றுமை, அன்பு, அமைதி மீண்டும் தவழ ஆரம்பித்தது. நிறைய ஆஸ்ரமவாசிகள் வந்து தங்க ஆரம்பித்து அந்த ஆஸ்ரமம் மிகவும் நல்ல நிலைக்கு மீண்டும் வந்தது.


## அறிவிப்பு

மதுரமுரளி இதழில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கட்டண விபரம்** (5 வரிகள் / 40 வார்த்தைகள்)

¼ Page Size Rs. 2000/-

விளம்பரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

''மதுரமுரளி'', குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,

24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

✆ 044-23710110

# மாயச்சிரிப்பும் மந்திர ப்ரயோகமும்
## (பைராகியும் பரமாத்மாவும் - சென்ற இதழ் தொடர்ச்சி)

**- திரு. N. அப்பன் ஐயங்கார்,** ஸ்ரீ ரங்கம்

பகவான் யோகிராம் சுரத்குமார் சிரித்தார். சிரிப்பு என்றால் அப்படி ஒரு சிரிப்பு. கள்ளமில்லா சிரிப்பு. அருகில் இருந்த பக்தனாகிய எளியேனுக்கு அது சந்தோஷத்தைக் கொடுத்தது. அதன் கருத்தை, அவர் காட்டிய இரக்கத்தை ரசிக்க முடிந்தது. பைராகிக்கோ எரிச்சலைத் தந்தது. தன்னைப் பகவான் ஏளனம் செய்வதாக நினைத்துக் கோபமுற்றான். ''என்னை என்னவென்று நினைத்தாய்? என் சக்தியைத் தெரிந்து கொள்; என் மருந்தின் மகிமையை அறியாத நீ ஏளனம் செய்கிறாய்!'' என்று கத்தினான். ''இந்தா, உன் கையைக் காட்டு!'' எனச் சொல்லி, பகவானின் கையிலும் அருகிலிருந்த என் கையிலும் மருந்தைக் குடுவையிலிருந்து தட்டி, 'சாப்பிடுங்கள்' என்று கூவினான்.

ஸ்ரீநிவாசன் அந்த இடத்திலுள்ள டபரா, டம்ளர், டீ எடுத்து வந்த கிளாஸ் டம்ளர் ஆகியவற்றை எடுத்து, கதவைத் திறந்து வெளியே போய்விட்டார். பகவானின் உத்தரவு பெறாமலே ஸ்ரீநிவாசன் மருந்தை வாயில் போட்டு மென்றவண்ணம் சென்றார். பகவானின் சிரிப்பு ஒலி நின்றது. கண்ணால் ஜாடை காட்டி எளியேனை மருந்தைச் சாப்பிடச் சொல்லித் தாமும் உண்டார். இதற்கிடையில் கிழக்கு நோக்கி உட்கார்ந்திருந்த பைராகி மேற்குத் திசை நோக்கி உட்கார்ந்தான். தோற்றம் மாறியது. கண்களை மூடிய வண்ணமும், அவர் உடலிலிருந்து அருகே உட்கார்ந்திருப்போர்க்குக் கடுமையான உஷ்ணம் தாக்குவதையும் எளியேன் உணரத் தொடங்கினேன். பகவானோ சாந்த சொரூபியாகவும், ஏதோ மந்திரம் முணுமுணுப்பதும் எனக்குத் தெரிந்தது. எளியேனின் ஆழ்மனத்தில் ஒரு பயம் பிறந்தது. ஆக்ரோஷமான நிலைக்குப் பைராகி மாறி ஏதோ சப்தம் கொடுக்கவும், பகவானும், ''சாய்பாபா!'' என்று கூப்பிட்டார்.

வராண்டாவில் நின்று கொண்டிருந்த சாய்பாபா என்று பெயர் சூட்டப்பட்ட நாய், பகவானின் அருகில் வந்து நின்றது. அதன் மேல் வலக்கையைப் போட்டபடி காட்சி அளித்தார் பகவான். எதிராளி, மயக்கமடைந்து, மூர்ச்சை அடைந்திருப்பார் என்று கருதிய பைராகி அதிர்ச்சியுற்றான். ''ஆ: பைரவர்'' என்று பகவானைப் பார்த்துக் கூவினார். நாய்வாகனம் தானே பைரவருக்கு; நிஜமாகவே நாய் மேல் கையைப் போட்டுக்கொண்டிருந்த பகவான் அவன் கண்களுக்குக் காலபைரவராகத் தெரிந்திருக்க வேண்டும். எனக்கு அந்தக் காட்சி இல்லை. மூர்க்கர்களுக்கு அறிவு இராது. மேலும் மேலும் தொடர்ந்து துன்பங்களைத் தருவதிலேயே இருப்பார்கள். தான் உச்சாடனம் செய்த மூர்த்தியாகவே தோற்றம் அளித்தபோதே தவற்றை உணர்ந்து பைராகி மன்னிப்புக் கேட்டிருக்க வேண்டும். அவன் அதைச் செய்யாமல், பகவானுக்கு, மேலும் அதிக சக்தியுள்ள ஒரு தெய்வத்தை அழைத்து, மந்திரப் பிரயோகம் செய்யலானார். திசைமாறி பைராகி உட்கார்ந்தார். கண் மூடிக் கொண்டது. ஆக்ரோஷமாக உடலைச் சிலிர்த்து மந்திர உச்சாடனத்தைத் தொடர்ந்தார்.

இப்போது என்னுள் பயம் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. கமண்டலம் விலை நிர்ணயத்தின்போதே பைராகிக்கு என்மீது கோபம். பகவான் துணை இருக்க இவன் என்ன செய்துவிட முடியும்? உறுதிப்பாடும் இருந்தது. ஸ்ரீநிவாசன் கெட்டிக்காரன்; வெளியே போய்விட்டான். நான் அல்லவோ இரு மாபெரும் சக்திகளின் மோதலில் மாட்டிக்கொண்டேன்! அப்படித்தான் சூழ்நிலை இருந்தது. பைராகியின் செய்கைகளைக் கண்ணுற்ற பகவான் எழுந்து நின்றார். தலைக்கு மேல் கைகளை உயர்த்தி நர்த்தனம் செய்யத் தொடங்கினார். அழகான கம்பீரமான குரலில் ''ஜே! ஜே! ஹனுமான், ஜெய ஜெய ஹனுமான்'' என்று பாடிப் பரவசமானார். பைராகி கண்மூடிய நிலையில் இருந்தார்; கண்ணைத் திறந்தார். ''ஹே பரமாத்மா! ஹே பரமாத்மா! இங்குதான் இருக்கியா?'' என்று கூவினார். பகவானின் இரு திருவடிகளையும் கரங்களால் பற்றிச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். எளியேனுக்குப் பைராகியின் செயல்தான் கண்ணில்பட்டது! என் அறிவும் சிந்தனையும் பகவானின் பரமாத்ம சொரூபத்தில் லயித்திருந்தது. என்ன பாக்கியம்! இந்தப் பரமாத்மா சொரூபத்தைக் காண எத்தனை கண்கள் இருந்தாலும்

போதாதே! தலையில் கிரீடம், அதில் மயில்பீலி, கோமளாங்கிதத் திருமேனி. கிருஷ்ணாவதாரத்தில் தோன்றிய பரந்தாமன்', ஆழ்மனம் கூறிற்று. ''இது தானே காணக் கிடைக்காதே! சில நிமிடங்கள் ஆனாலும் சிந்தையில் இன்றும் என்றும் பசுமையாகத் தோன்றுகிறதே!'' பகவான் எளியேன்மீது கூர்ந்த பார்வையைச் செலுத்தினார். மீண்டும் நான் ரசிக்கும் கண்ணன் போல் காட்சி அளிப்பேன் எனக் கூறியது போல் உணர்ந்தேன்.

''ஹே பரமாத்மா! இந்த மூர்க்கனை, மன்னியுங்கள்! கருணாமூர்த்தியான தாங்கள் தயாளு. வறியவர்களுக்கும் நலிந்தவர்களுக்கும் புகலிடம் தங்கள் திருப்பாதங்களே. ஆணவமும், அகங்காரங்களும், மந்திர சக்தியும், படாடோபமும் வீண். என் அகக்கண் திறந்தது. ஹனுமான் தங்களைச் சுற்றிச் சுற்றிச் ''ஸ்ரீராம்! ஜெய்ராம்! ஜெய் ஜெய் ராம்! என்று குதித்தது காதில் விழுந்தது. நான் அனுமானைத்தான் அழைத்துப் பாதகம் உண்டாக்க மந்திரப் பிரயோகம் செய்தேன். பரமாத்மா; நீங்களோ அந்த அனுமானைப் போற்றி, 'ஜெய ஜெய கோஷம்' போட்டீர்கள். என் அகந்தை அழிந்தது. அகந்தையை அழித்து, தெய்வ தரிசனம் தந்தீர்கள். எப்போது எனக்குக் கமண்டலம் வாங்க வழிசெய்தீர்களோ, அப்போதே, என்மீது தங்களுக்கு இரக்கம் பிறந்து விட்டது'' என்றார்.

''அது சரி, தீப்பெட்டி மேல் பரமாத்மாவுக்கு எனக் கூறி, முதலில் மாம்பழத் துண்டை வைத்தீர்கள். அது அப்படியே இருக்கிறதே! மீதிப் பழத்தைப் பிரசாதமாக நாம் நால்வரும் எடுத்துக் கொண்டுவிட்டோம். இந்த மாம்பழத் துண்டை என்ன செய்வது?'' என்றார் பகவான்! பைராகி சட்டென்று, ''நீங்கள்தாம் பரமாத்மா, ஸ்ரீ கிருஷ்ண சொரூபி, நீங்கள்தான் அதைச் சாப்பிட வேணும்'' என்று கூறி, மீண்டும் நமஸ்கரித்தார். பகவானின் பார்வை எளியேன்மீது விழுந்தது! வைத்தகண் மாறாமல் பகவானை மனத்தில் இருத்தி நாம ஜபத்தில் இருந்த எனக்கு மகத்தான பாக்கியத்தை, ரகசியத்தைக் காண்பித்தார். பைராகியோ பயணத்துக்கு மூட்டையைக் கட்ட, கவனத்தைச் செலவழித்தார். சற்று எட்டத்தில் இருந்த தீப்பெட்டியில் உள்ள மாம்பழத்துண்டை எடுக்க ஒரு கையை ஊன்றி, மற்றொரு கையால் மாம்பழத்துண்டை எடுத்து வாயில் போட்டுக்கொண்டார் பகவான். எனக்கு மட்டும் பகவான் பாலகிருஷ்ணன்போல் காட்சி

கொடுத்தார். தவழ்ந்த திருக்கோலத்தில் கண்ணன் படத்தைப் பார்த்து, எளியேன் சிறுவயது முதல் மனத்தில் இருத்தியதைக் கண் கூடாகக் கண்டேன். சூர்தாஸ் முன்பு கண்ணன் கைகளை கட்டிக் கொண்டு, தலையில் மயில்பீலி கொண்டையில் மிளிர, அமர்ந்த திருக்கோலமும் கண்டேன்.

''என்ன அப்பன்! திருப்பதிக்கு எப்போது இங்கிருந்து ரயில் இருக்கிறது? இந்திரஜித் சுவாமிஜீ போக வேண்டுமாம்'' என்ற கேள்வி எளியேனைத் தன்னிலைக்குக் கொண்டு வந்தது. ''திருவண்ணாமலை ஸ்டேஷனிலிருந்து 10.30க்குத் திருப்பதி எக்ஸ்பிரஸ் உண்டு'' என்றேன். பைராகியிடம், நீங்கள் திருப்பதி தானே போகவேண்டும்! இவர் இரயில்வேயில் 'TTR' ஆக இருப்பவர். நேரத்தைக் கேட்டுக் கொள்ளுங்கள்!'' என்றார் பகவான்.

பைராகியோ அச்சத்தோடு இப்போது எளியேனை நோக்கி, கைகளைக் கூப்பினார்! ''இதென்ன விந்தை, கமண்டல பேரத்தில் மிரட்டி உருட்டிய பைராகி, வணக்கம் தெரிவிக்க என்ன காரணம்? டிக்கட் இல்லாப் பயணத்தின் போது எத்தனை முறை TTR-ஆல் இரயிலிலிருந்து இறக்கிவிடப் பட்டாரோ! பகவான் தமக்கு இடைஞ்சல் செய்தவரையும் மன்னித்துவிடுவார். தம் பக்தனுக்கு இடைஞ்சல் வரச் சகிக்கமாட்டார். என்னைத் தூசு மாதிரி நினைத்து மிரட்டியதற்குப் பைராகியை வணக்கம் செலுத்த வழி செய்து தம் பக்தனுக்கும் தம் காருண்யத்தை வெளிப்படுத்தினார்.''

1) சன்னிதித் தெரு வீட்டினுள் அமர்ந்திருந்த பகவான் வெளியில் பைராகி வந்ததை அறிந்த விஷயம், 2) பைராகியின் கம்பளி மூட்டைக்குள் அபூர்வ மூலிகை மருந்து இருந்ததை அறிந்தது, 3)பைராகி பைரவரை அழைத்து வாதம் ஏற்படுத்தியது கண்டு தனக்குள்ளும் அந்தச் சக்திதான் என்றும் வாகனத்தோடும் கண்டுகொள் என்று காட்டியது, 4) அடுத்த மந்திரப் பிரயோகம் அனுமனைக் கொண்டது. பகவானோ ஸ்ரீஹரி சொரூபி. 7 நாட்கள் இரவும் பகலும் எச்செயலுமின்றி நாம ஜபத்தினால் ஸ்ரீ ராமனைக் கண்டவர். ஏன் ஸ்ரீராமனாகவே ஆனவர். ஏவப்பட்ட அனுமன், ''ஸ்ரீராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்'' என்ற உபதேச மந்திரத்தைக் கூறி, யோகி ராமனைச் சுற்றிக் குதித்ததைப் பைராகி தெரிவித்து,

நீயே பரமாத்மா என்று தாழ்பணிந்தது, 5) அந்த அபூர்வ மருந்து ஸ்ரீனிவாசனுக்கு மட்டும் இல்லை. எளியேனுக்கும் கிடைக்க வழி செய்தது. அந்த மாயச் சிரிப்பின் தாக்கம் அல்லவா? 32 வருடங்கள் ஓடும் இரயிலில் பணி செய்ததின் பலன்: முதுகுத் தண்டுவடம் தேய்ந்ததில் ஏற்பட்ட வலி, பைராகி மருந்து சாப்பிட்டபின் போன திக்குத் தெரியவில்லை! மாலை 6 மணி முதல் இரவு 10க்குள் எவ்வளவு சம்பவங்கள், எவ்வளவு அற்புதங்கள், எவ்வளவு தபஸ் செய்தாலும் காணக்கிடைக்காத தரிசனங்கள். இதெல்லாம் எதனால்? பரிபூர்ண சரணாகதி, அசைக்க முடியாத நம்பிக்கை! பகவானிடம் இது போதும்! மீதியைச் சுவாமி பார்த்துக் கொள்ளும். இதுதான் ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமியின் உபதேசமும் பின்பற்றுவோம்; பயனடைவோம்!

With Blessings of Sri Sri Muralidhara Swamiji

srivari printers

Enters Digital Printing

DIGITAL
- Hoardings
- Signages
- Flex Banners
- Vinyl Printing
- Glow Sign Boxes
- Spl. Colours Ptgs.
- POP Displays, Etc.,

SCREEN
- Cloth Banners
- PVC Banners
- Flex / Metal Boards
- Standing Boards
- Signages
- Vellvette Printing
- Wedding Bags, Etc.,

13A, Victoria Cresent Road,Egmore, Chennai - 600 008.
Ph: 52638229 \ 52638355 Cell : 98400 51910
Email : srivariprinters@hotmail.com

# அதிமானுஷன்

எவ்வளவோ விழிப்புடன் எம்பெருமான் தன்னை மனிதனே என்று தோன்றச் செய்து, அதற்கேற்ற நடை, உடை **பா**வனைகளை மேற்கொண்டாலும், அவனுமறியாமல் மஹான்கள் அவன் நடத்தையில், ''இவனே பரம்பொருள்'' என்பதை நமக்கு விளங்க வைக்கின்றனர்.

''கர்ம ஜ்ஞான-பக்தியோகாதிகளான ஒரு மோக்ஷ மார்க்கமும் அறியாதவர் ஜடாயு. பரம புருஷார்த்தமும் மோக்ஷம்தான் எனத் தெரியாது. மேலும், அந்தணனால் கொல்லப்பட்டவனுக்கு மோக்ஷம் மட்டுமில்லை, நல்லவுலகும் கிடையாது என்கிறார்கள் ஆன்றோர்கள். (ராவணன், விச்ரவஸ்ஸின் மகன் என்பதால் ப்ராம்மணோத்தமன் தான்). மோக்ஷோபாயத்தை அனுஷ்டிக்கும் பிறவியும் கிடையாது. பறவையினம். ஸ்ரீ வைஷ்ணவ ஸமாச்ரயணம் பெற்றவருமில்லை. உயர்ந்த பிறவிகளில் ஏதேனும் ஒன்றில் பிறந்து, உபாஸனம் செய்து, இடையில் தடையேற்பட்டு, இப்பிறவியில் பூர்வ ஜன்ம வாஸனை தொடரும் யோகப்ரஷ்ட ஜன்மமும் கிடையாது. இப்படியிருக்க, இவரை மோக்ஷமார்க்கத்தில் அனுமதித்தீரே! இது எப்படித் தகும்?'' என்கிறார் ஆழ்வான். ''இதுவே, ஸர்வேச்வரனான தங்களது அதிமானுஷத்வத்தைத் தெரிவிக்கிறது. எதைக் காரணமாகக் கொண்டு மோக்ஷமளிக்கலாம் என அறியும் ஞானமும் அதை நிறைவேற்ற ஆற்றலும் தேவரீரே படைத்தவர்!

அதே சமயத்தில், சீதாபிராட்டி சென்ற வழி தேவரீருக்குத் தெரியவில்லை! அவளையடைய உபாயமும் தெரியவில்லை! வருந்தி, அழுது, வெறுத்து, குழம்பி, செய்வதறியாது கலங்கியபோது இளைய பெருமாள் தெளிவிக்க வேண்டிவந்தது. என்னதான் தேவரீர் திருவுள்ளமோ? அடியேன் அறியேன்'' எனக் கூரத்தாழ்வார் வியக்கிறார்!


अबधिं न तेरिथ जिगेथ न राक्षसेन्द्रं . . . . . என்ற ஸ்லோகம்.

சமுத்ரத்தின் இக்கரையில் எம்பெருமான் எழுந்தருளி, இருந்த போது சரணாகதனான ஸ்ரீ விபீஷணாழ்வானை லங்காராஜ்யத்திற்கு

அதிபதியாக ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் எம்பெருமான் பண்ணியருளினான். இந்த வ்ருத்தாந்தத்தை எண்ணி எண்ணி ஆழ்வான் வியக்கிறார்!

''உலகில் அரசர்கள் படையெடுத்துச் சென்றால் எதிரியை வென்று அவன் ராஜ்யம் தன் கைவசமான பின்பு தனக்கு வேண்டியவனை அவன் ஸ்தானத்தில் முடிசூட்டி மகிழ்வார்கள். இப்படி உலக வழக்கு இருக்க, தேவரீர் கடலை இன்னமும் தாண்டியாகவில்லை; எதிரியை வெல்லவுமில்லை; அவன் பலம் என்ன? அவன் வலுவிழந்த இடம் எது? அவனது ஸைன்யத்தின் அளவு என்ன? அவனது மூலபலம் எவ்வளவு? என்பன போன்ற எந்த விசாரமும் செய்யாமல் முடிவாக ஐயமேதும் இல்லாமல் அவன் பதவியில் அவன் தம்பியை முடிசூட்டி மகிழ்ந்தருளினீரே! ஆகவே, தேவரீர் அதிமானுஷனான எம்பெருமானே என்பதைப் பாவுகர் அறிவர்!'' என வியந்து போற்றுகிறார்.

**— ஜயந்தி ஜானகிராமன்**



# மாலே மணிவண்ணா-32

**- மஹாவித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்**

*75 ''அருள் குடையாக அறம்கோலாக*
*இருநிழல் படாஅமை மூவேழ் உலகமும்*
*ஒரு நிழலாக்கிய ஏமத்தை மாதோ''*

அவன் உலகைக் காக்கின்ற காப்பினை உடையவன். 'ஏமம் என்றால் காத்தல்' என்று பொருள். ('மாதோ' என்பது அசை) கீழ், நடு, மேல் என்று மூன்று தட்டுகளாகச் சொல்லப்படுகிற மூன்று ஏழாகிய 21 உலகங்களையும் பெருமான் காக்கின்றான். 'இரு நிழல் படாமை'க் காக்கிறான். இரண்டு நிழல் படாதபடி, இன்னொரு அரசனது குடை நிழல் படாதபடி தன் ஒரு குடை நிழலால் காக்கிறான் என்பதை 'இரு நிழல்' படாமை என்றும், 'ஒரு நிழல் ஆக்கிய ஏமத்தை' என்றும் கூறினார். இனி உலகிற்கு நிழல் தருகிற திருமாலின் குடையை இன்னது எனக் காட்டுகிறார். அந்தக் குடைக்கு அறமே குடைக்காம்பாக இருக்கிறதாம். ''அறம் என்ற காம்பின்மேல் விரிந்து நிழல் செய்கின்ற குடையாக அருள் அறத்தின் அடிப்படையின்மேல் விரிந்து பரந்த அருள் என்கின்ற நிழலில் உலகம் அனைத்தையும் பிறர் ஒருவர் வேண்டாது தானே காக்கும் தனிமுதல் திருமால்'' என்றார்.

'அருள்' என்பது உயிர்கள்மாட்டுக் கொள்ளும் பேரிரக்கமாகும். துன்புறுகின்ற உயிர்களுக்கு இரங்கிக் கண்ணோடி அவ்வுயிர்களுக்கு நலம் செய்வது 'அருள்' என்றாகும். ஓர் உயிரைத் துன்பத்திலிருந்து காக்கும் எண்ணம் கொண்டவர்கள் அதற்காகப் பிற உயிர்களைத் துன்புறுத்துதலும் உண்டு. எல்லா உயிர்க்கும் நலம் செய்து உயிர் இரக்கம் உடையவராக இருப்பவர் ஒருசிலரே. வழிப்பறி, கொள்ளை, கொலை முதலியவற்றால் பலரை வருத்தி, சிலருக்கு நலம் செய்கின்ற சிலரும் உலகத்தில் உள்ளனர். இவர்கள் அறத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் மறம் செய்து அருள் காட்டுகிறார்கள். பயன் நன்றானாலும், வழியும் நன்றாக இருக்க வேண்டும். நம்முடைய நாடு சுதந்திரம் அடைகிறபோது மகாத்மா காந்தி அவர்கள் நமக்குக் காட்டிய வழியை இங்கே நினைத்துப் பார்க்கலாம். நம்முடைய நோக்கம் சுதந்திரம். ஆனாலும், அது

நமக்குப் போராலும் கருவிகளாலும் ஏற்படும் தீய மரணங்களின் சந்திப்பாலும் கிடைக்கக் கூடாது. கிடைத்தால் அது சுதந்திரமாகாது. உண்மை, அஹிம்சை, சத்யாக்ரஹம் என்கின்ற தியாக நெறியின் மூலமாகக் கிடைக்க வேண்டும் என்று வழி வகுத்து நம்மை நடத்திய மகாத்மா, அறத்தின் வழியில் அருளை நடத்தியவர் ஆவர்.

இதையே வள்ளுவர், 'உள்ளதை உள்ளபடியே சொல்லுதல்' உண்மையானாலும், 'உள்ளதை மறைத்துப் பேசுகிற இல்லாததைப் பேசுகிற பொய்ம்மையும் பிறிதோர் உயிர்க்கு எவ்வகையிலும் தீமை இல்லாததாக, நன்மை தருவதாக ஆனால், வாய்மையே என்றார்.

*''பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த*
*நன்மை பயக்கும் எனின்''*

(குறள். 292) என்பது வள்ளுவர் வாய்மொழி.

எம்பெருமான் உயிர்களுக்குப் பகையானோரை அழிக்குங்காலும் அவர்களிடமும் அறத்தின் அடிப்படையில் வாய்ப்புகளை அருளி, அவற்றாலும் திருந்தாத வழியே அவர்களை அழிக்கின்ற தன்மையை இதிகாச, புராணக் கதைகளைக் கொண்டு நாம் உணரலாம்.

'பகைவனுக்கும் அருளுகின்ற பரமகருணையாளன் திருமால்' என்பதை இராமாவதாரத்தில், தன் மனைவியையே அபகரித்த இராவணனை முதல் நாட்போரில், ''இன்று போய்ப் போர்க்கு நாளை வா'' என்று கருணை காட்டியமை கொண்டு அறியலாம். அங்கும், போராய் இருந்தால் நாளை வா, சமாதானமாயிருந்தால் நான் இப்போதே உன்னை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன் என்ற கருத்தில் 'போருக்கு நாளை வா' என்று சொல்வதைப் பார்க்கிறோம் அல்லவா?

எம்பெருமானது கருணையில் எங்கும் அருள் அறத்தின் அடிப்படையில் நிகழ்கிறது. ஆகையால், அவனது அருள் என்னும் குடை, அறத்தினையே காம்பாகக் கொண்டிருக்கிறது. அந்நிழலில் உயிர்கள் பாதுகாப்பாக இருக்கின்றன என்று திருமாலின் காத்தல் தொழிலின் சிறப்பினைப் பரிபாடல் சொல்கிறது.

இவ்வாறு உயிர்களைப் பாதுகாப்பதற்காக இறைவன் தாமே தத்துவங்களாக விரிந்து நலம் செய்கிற பாங்கை மேலே சொல்கிறார்.

(தொடரும்)

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 32

ஸ்ரீபாத நவகிஷோர்கோஸ்வாமியும் ஸ்ரீபாத லோசனானந்த கோஸ்வாமியும் டாகாவைச் சேர்ந்த ஸ்ரீ ஸ்ரீ நித்யானந்தரின் பரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீபாத லக்ஷ்மிகாந்தகோஸ்வாமிப்ரபுவின் புத்திரர்கள். ஸ்ரீ நவகிஷோர்கோஸ்வாமி, தமது மூத்த சகோதரர் ஸ்ரீ க்ருஷ்ணகிஷோர்கோஸ்வாமியிடம் தீக்ஷை பெற்றுக்கொண்டார். ஸ்ரீ லோசனானந்தகோஸ்வாமி, ஸ்ரீ நவகிஷோர்கோஸ்வாமியிடம் தீக்ஷை பெற்றுக்கொண்டார். பரஸ்பரம் குரு சிஷ்யர்களாக இருந்தாலும், இரண்டு கோஸ்வாமிகளும் ஈருடல் ஓர் உயிர் போன்று விளங்கினர். இருவரும் வைராக்யசாலிகளாகவும் பஜனையில் அனுராகம் உள்ளவர்களாகவும் திகழ்ந்தனர்.

இருவரும் இளம் வயதிலேயே சம்சாரத்தைத் துறந்து வ்ருந்தாவனம் சென்றுவிட்டனர். இருவரும் கோவர்த்தனத்தைச் சேர்ந்த சித்தபாபா க்ருஷ்ணதாஸிடம் அடைக்கலம் புக விரும்பினர். தங்களது உண்மையான குலத்தையும் பரம்பரையையும் வெளியிட்டால் தங்களை உயர்ந்தவர்கள் என்று எண்ணி அவர் ஏற்றுக்கொள்ளாவிட்டால் என்ன செய்வது?'' என்று நினைத்து, தங்களை மிகத்தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறிமுகப்படுத்திக்கொண்டு அவரது க்ருபையை வேண்டினர். சித்தபாபா அவர்களது ஜொலிக்கும் உருவம், பணிவு, குணம், ப்ரேமை ஆகியவற்றில் தன்னை மறந்து, அவர்களை நம்பி, தமது சிஷ்யர்களாக ஏற்றுக்கொண்டு தம் ஆஸ்ரமத்திலேயே தங்க வைத்து, அவர்களுக்கு பஜனை மார்கத்து சிக்ஷை அளித்தார்.

சித்தபாபா க்ருஷ்ணதாஸ், வயோதிக தசையில் இருந்தார். அவருக்கு இவர்களைப் போன்ற சிரத்தையுள்ள சேவகர்களின் தேவையும் இருந்தது. எனவே, இந்த இரு இளைஞர்களின் சேவையைச் சங்கோஜமின்றி ஏற்றுக்கொண்டார். இரு சகோதரர்களும் மிகவும் அன்புடனும் மரியாதையுடனும் குருவுக்கு அனைத்துச் சேவையும் செய்தனர். அவரது மலமூத்திரங்களை அகற்றுவதுவரை அன்புடன் செய்து வந்தனர்.

சில தினங்கள் கழிந்ததும் இந்தச் சகோதரர்களின் இளைய சகோதரன் இவர்களைத் தேடித்தேடி விசாரித்து, கடைசியில் கோவர்த்தனத்தை அடைந்து சித்தபாபாவிடம் வந்து சேர்ந்தான். பாபாவுக்கு உண்மை விளங்கியதும், கோபத்தால் சிவந்து போனார். அந்தச் சமயம், இரு சகோதரர்களும் மானஸ கங்கையில் ஸ்னானம் செய்யச் சென்றிருந்தனர். ஸ்னானம் முடிந்து ஆஸ்ரமம் வந்தபோது தங்களது தம்பி பாபாவின் அருகில் அமர்ந்திருப்பதைக் கண்டனர். பாபாவின் முகமும் கண்களும் கோபத்தில் சிவந்திருப்பதையும் கண்டனர். பாபாவின் கோபத்துக்கான காரணத்தைப் புரிந்து கொள்ள அவர்களுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை! இருவரும் தடாலென்று பாபாவின் சரணங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து ப்ரார்த்தித்துக்கொண்டனர். பாபா கோபத்தினால் நடுங்கும் குரலில், ''இத்தனை வஞ்சனையா? பஜனை சம்ப்ரதாயமே உங்களது சொத்துத் தானே! உங்களுக்குத்தானே இதை அடைய அதிகாரம் உள்ளது! பின் ஏன் இந்தப் பொய் நாடகம்?'' என்று வினவினார்.

அவர்கள், ''ப்ரபோ! நாங்கள் ஜன்ம ஜன்மமாக உங்களுக்கு அபராதம் செய்துவிட்டோம். இதனால், உச்ச குலத்தில் எங்களுக்குப் பிறப்பு ஏற்பட்டு விட்டது. 'கௌரவம், தனம், பெருமை, மரியாதை போன்ற கழுதையின் மலம்தான் எங்களுக்கு வாழ்க்கை. எளிய பக்தியில் எங்களுக்கு அதிகாரமே இல்லை. இதனால்தான் நாங்கள் தங்களிடம் சூழ்ச்சி செய்தோம். நீங்கள் பரமதயாளுவான உயர்ந்த வைஷ்ணவர். எங்களது அபராதத்திற்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் அளியுங்கள்!'' என்றனர்.

சித்தபாபா மனதுக்குள் மிகவும் ப்ரசன்னமடைந்தார். ஆனால், அதை மறைத்துக்கொண்டு, வெளியில் கோபத்தைக் காட்டிக் கொண்டு, ''உங்களுக்கு என்ன தண்டனை தெரியுமா? இருவரும் தங்கள் கைகளால் தங்கள் பாதத்தை அலம்பி, அந்தச் சரணாம்ருதத்தை என் முன் வையுங்கள்'' என்று கட்டளை இட்டார்.

மஹாபுருஷனின் கோபத்தைச் சாந்தம் செய்ய அவர்களிருவரும் தங்களது விருப்பமில்லாமல் இந்தக் காரியத்தை செய்துமுடிக்க வேண்டியதாயிற்று. சித்தபாபாவும் அந்தச் சரணாம்ருதத்தை ஏற்றுக் கொண்டு மிகவும் ப்ரசன்னமாகிக் கூறினார். ''கிருஷ்ணன் பெரிய க்ருபாளு! உங்களைப் போன்ற மஹாபுருஷர்களின் சங்கத்தை எனக்கு அளித்துள்ளான். இனி இதுபோல் வஞ்சனை செய்யாதீர்கள்!

உங்களுக்குள் இருக்கும் தீன பக்தியின் ஒரு திவலைகூட என்னிடம் கிடையாது. நீங்கள் இருவரும் இங்குத் தங்கி இருந்து விருப்பம் போல் சுதந்திரமாகப் பஜனை செய்யுங்கள். நான் தன்யனாகிவிடுவேன் என்றார்.''

இருவரும் ஒரே குரலில், ''ப்ரபோ! இனி ஒரு முகூர்த்த நேரம் கூட நாங்கள் இங்குத் தங்கமாட்டோம்'' எனக் கூறிவிட்டுக் கிளம்பி விட்டனர். மூன்று சகோதரர்களும் விடைபெற்றுக்கொண்டு காம்ய வனத்தின் கிழக்கேயுள்ள 'பசுப்' என்ற ஜனசந்தடியற்ற க்ராமத்தில் இருந்துகொண்டு பஜனை செய்ய ஆரம்பித்தனர். சில சமயம், காம்ய வனத்தைச் சேர்ந்த ஜயக்ருஷ்ணதாஸ்பாபாவிடம் வருவார்கள். ஒருமுறை அப்படி வரும்பொழுது, நவல்கிஷோர்கோஸ்வாமியின் உபாஸனா மூர்த்தியான ஸ்ரீராதாமதன்மோஹன் விக்ரஹத்தைக் க்ருஷ்ணதாஸ்பாபாவிடம் சமர்ப்பிக்குமாறு நேர்ந்தது. ஏனென்றால், முதல் நாள் இரவு ராதாமதன்மோஹன் நவல்கிஷோர்பாபாவின் கனவில் தோன்றி, ''நான் உன்னுடைய ஸேவையினால் த்ருப்தி அடைந்தேன். இனி க்ருஷ்ணதாஸ்பாபாவின் ஸேவையை ஏற்பேன். என்னை அவரிடம் கொடுத்துவிடு'' என்று ஆணையிட்டான். அதற்குக் கட்டுப்பட்டு, நவல்கிஷோர்கோஸ்வாமி, ராதாமதன்மோஹனை ஜயக்ருஷ்ணதாஸ்பாபாவிடம் பிரிய மனமின்றி ஒப்படைத்தார்.

பசுபவனத்தை அடைந்த சில தினங்களிலேயே மூன்றாவதாக வந்த சஹோதரர் இறைவனடி சேர்ந்துவிட்டார்! சில தினங்களில் அவரது வம்சத்தைச் சேர்ந்த யாரும் இல்லாததால் டாகாவில் டாகூர் ஸேவை செய்ய யாரும் இல்லை என்ற செய்தி அவர்களுக்குக் கிடைத்தது. உடனே இருவரும் டாகாவிற்குச் சென்றனர். டாகாவில் டாகூர் அவர்கள் கனவில் தோன்றி, ''சட்டக்ராம் ஜில்லாவைச் சேர்ந்த பர்தாபாஜ் கிராமத்தில் நாத வம்சத்தைச் சேர்ந்த ஒரு பக்த ஜமீன்தார் இருக்கிறார். அவரது வம்சம் சீக்கிரம் அழியப் போகிறது. உடனே, என்னை அங்கு அழைத்துச் செல்லுங்கள். ஜமீன்தாரின் தனத்தால் என்து சேவை தொடர்ந்து நடைபெறும்'' என்று கட்டளையிட்டான். உடனே அவர்கள் சட்டக்ராம் சென்று அங்குப் ப்ரஸித்தமான கவியான கார்த்திக் அதிகாரி என்பவரின் க்ருஹத்தில் தங்கினார். கார்த்திக் அதிகாரி டாகுர்ஜி கூறிய ஜமீன்தாரின் நம்பிக்கைக்குப் பாத்ரமான வைத்யனும் கூட. எனவே, அவர் ஜமீன்தாரிடம் சென்று டாகூரின் கட்டளை, இரண்டு கோஸ்வாமிகளின் வருகை பற்றிய

செய்தியைத் தெரிவித்தார். ஜமீன்தாரும் மிக சந்தோஷமடைந்து தமக்குச் சொந்தமான நிலத்தை, டாகூருக்கு எழுதி வைத்தார்.

ஒருநாள் கார்த்திக் அதிகாரியின் வீட்டில் ஸங்கீர்த்தனம் நடந்து கொண்டிருந்தது. நிறைய, பக்தர்கள் கூடியிருந்தனர். கீர்த்தனத்தின்பொழுது நடனமாடிக் கொண்டிருந்த ஸ்ரீபாத்லோசனாநந்த ப்ரபுவுக்குத் திடீர் என்று ஆவேசம் ஏற்பட்டு ஓடினார். திடீரென்று காணாமல் போய்விட்டார். கீர்த்தனம் முடிந்தவுடன் அவர் திரும்பி வராததால் அவரைத் தேடத் தொடங்கினர். ஆனால், அவரைப் பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை. அதிகாரி நவத்வீப், ப்ருந்தாவன், நீலாசல் ஆகிய இடங்களுக்கு ஆட்களை அனுப்பித் தேடச்சொன்னார். மூன்று நாட்களுக்குப் பிறகு அதிகாரி தமது அறையில் பேசிக் கொண்டிருந்தபொழுது, சற்றுத் தூரத்தில் உள்ள ஒரு குப்பைக் குழியில் பசுமாடுகள் விரித்த கண்களுடன் நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். சில மாடுகள் எதையோ முகர்ந்து கொண்டிருந்தன. சில வாலைத் தூக்கி நடனம் செய்தன. உடனே, அனைவரும் வீட்டுக்கு வெளியே வந்து, அந்தக் குழியுள் என்ன உள்ளது? என்று பார்த்தனர்.

அதில் லோசனானந்த ப்ரபு தலைகுப்புற விழுந்து கிடந்தார். அவர் சரீரம் முழுவதும் குப்பையாலும், சேற்றாலும் மூடப்பட்டிருந்தது. அவர் சரணங்கள் மட்டும் வெளியே தெரிந்தன. முந்தின நாளிரவு ஐந்நூறு பேர்களின் எச்சில் இலைகள் அந்தக் குழியில் எறியப்பட்டு இருந்ததால், அவரது பாதங்களும் பாதி மூடப்பட்டிருந்தன. பசுமாடுகள் இலை தின்பதற்காக அந்தக் குழியை குழுமியிருந்தன. இலையைச் சாப்பிடும்போது தம்மை அறியாமல் லோசனானந்தரின் பாதங்களையும் நக்கிவிட்டதால், அந்த மாடுகளுக்கும் அபூர்வ ஆனந்தம் உண்டானதால், வாலைத் தூக்கிக்கொண்டு நடனமாட ஆரம்பித்தன. உடனே அதிகாரி மற்றவர்களுடன் சேர்ந்து, லோசனானந்தரை வெளியில் எடுத்து அவரைச் சுத்தப்படுத்தினார். எல்லோரும் அவர் இறந்துவிட்டார் என்று நினைத்துச் சோகம் அடைந்தனர். ‘‘இப்படிப்பட்ட மஹாபுருஷர் இவ்விதமாக மூன்று நாட்கள் குப்பைக் குழியில் கிடந்து மரணத்தை அடைந்தாரே!’’ என்று வருந்தினர். அதிகாரி வைத்தியராக இருந்ததால், அவரை நன்றாகச் சோதித்துவிட்டு, ‘‘பரபுவின் பிராணன் போகவில்லை; சரீரத்தில் அடங்கி உள்ளது. இறந்த சரீரமாக இருந்தால் இப்படிக் காந்தியுடன் இருக்காது. நீங்கள் மறுபடியும் நாமகீர்த்தனம்

செய்யுங்கள்'' என்று கட்டளையிட்டார். அனைவரும் கீர்த்தனம் செய்ய ஆரம்பிக்கும்பொழுதே, ப்ரபு, தம்மை உதறிக்கொண்டு எழுந்து நடனமாட ஆரம்பித்தார். அவருக்கு வெளிஉணர்வு ஏற்பட்டதும் ஜனங்கள் அவரிடம் ஆவலுடன் அவரது பழைய அவஸ்தையைப் பற்றி வினவினர். அவர் மெதுவாக, ''எனக்கு ஒன்றும் தெரியாது'' என்று கூறி விட்டார்.

சட்டக்ராம் ஜில்லாவைச் சேர்ந்த ஸீதாகுண்ட் எனும் கிராமத்தில் மஹாசிவராத்ரியை முன்னிட்டுப் பதினைந்துநாட்கள் மேளா நடைபெறும். இதில் ஏராளமான ஸாதுக்களும் பக்தர்களும் அங்குக் கூடி அர்த்தஜாமத்தில் சிவனைத் தரிசனம் செய்வார்கள். ஒருமுறை லோசனானந்தர் பக்தர்களுடன் அங்குச் சென்றார். அப்பொழுது அவர்கள் காலபைரவரின் கோயிலருகே செல்லும்போது ஒரு யோகீஶ்வரர் வெளிவருவதைக் கண்டனர். அவர் ஐந்து கைகளுடன், கழுத்தில் கபாலமாலை அணிந்து, கருமையான நிறத்துடன், உடம்பு முழுவதும் பஸ்மம் அணிந்து, காணப்பட்டார். அவரது கண்கள் எரியும் தணலைப்போல் சிவந்து இருந்தன. இவரைக் கண்டு அனைவரும் பயந்துவிட்டனர். ஆனால், இவரோ ப்ரபுவின் சரணங்களில் விழுந்து, ''ப்ரபோ! நான்தான் காலபைரவர். மனிதர்களின் பாபங்களைக் க்ரஹித்து, பாபியாகவே ஆகிவிட்டேன். உங்களையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் எனக்கு உபதேசம் செய்து அருள வேண்டும்'' என்று அவர் கோர, ப்ரபு அவருக்குக் க்ருஷ்ண மந்திரம் உபதேசம் செய்தார்.

ஒரு சமயம் அந்தக் கிராமத்தில் பயங்கரமான நோய் பரவியிருந்தது. ப்ரபு ஒரு நாள் நதியில் ஸ்னானம் செய்து, பூஜைக்காக ஜலம் எடுத்துக்கொண்டு வரும்பொழுது துர்நாற்றமுடைய ஒரு கோரமான கிழவி அவரது சரணங்களைத் தீண்டினாள். கோபமடைந்த ப்ரபு, ''நீ யார்'' என்று அவளைக் கேட்க, அவள், ''அந்தக் கோரமான நோயின் தேவதையே நான்!'' என்று கூற, ப்ரபு கருணையுடன் அவளுக்குக் க்ருஷ்ண மந்திரம் உபதேசம் செய்தார். மேலும், குரு தக்ஷிணையாக, அவளை அந்தக் கிராமத்திலிருந்து உடனடியாக வெளியேறுமாறு கூறி, ஒரு காலும் மீண்டும் வரக்கூடாது'' என்று கட்டளையிட்டார்.

சில நாட்களுக்குப் பின் இரு சஹோதரர்களும் ரத யாத்திரை காணப் பூரி சென்றனர். ஸ்ரீ ஜகந்நாதரின் பாண்டு விஜயத்தின் பொழுது அவரைத் தரிசனம் செய்துகொண்டே, மூத்தவர் மறைந்து விட்டார். இளைய ப்ரபு அவரது சரணத்திலேயே உட்கார்ந்து - ''ப்ரபோ ! தாய் வயிற்றிலிருந்து இன்று வரை தாஸனான என்னை உங்களது நிழல் போல் கூடவே வைத்திருந்தீர்கள். இப்பொழுது என்னை அனாதையாக விட்டுச் சென்று விடுவீர்களா?'' என்று கேட்டுக்கொண்டே, அவரும் அவரைப் பின் தொடர்ந்து தம் உயிரை நீத்தார்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

---

ஸ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

- மதுரமுரளிக்கான சந்தா தொகையை, ''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'' என்ற பெயரில் மட்டுமே M.O. or D.D. ஆக அனுப்ப வேண்டும்.

  உள் நாடு : வருட சந்தா ரூ. 60/- ஆயுள் சந்தா ரூ. 1000/-
  வெளி நாடு : வருட சந்தா ரூ. 300/-

- சந்தாவை காசோலையாக அனுப்ப வேண்டாம்.
- சந்தா எண், சந்தாதாரர் முகவரி இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ளமாட்டாது.
- மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் Address labelல் இரண்டாம் வரியில் உள்ளது.
- சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்பினால்தான் வரும் மாதத்தில் செயல்படுத்த முடியும்.
- மதுரமுரளி விஷயமாக அனுப்பும் தபால்களின் கவரில் பின்வருமாறு முகவரியை கட்டாயம் எழுதவும்.

''**மதுரமுரளி**'', குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,
24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 113

'ஞானத் தபோதனரை வாவென்றழைக்கும் மலையாம்' – என்பது ஞானசம்பந்தர் மற்றும் ஸ்ரீரமணமஹரிஷிகள் போன்ற மஹாத்மாக்களின் வாழ்க்கை வரலாறுகளிலிருந்து உறுதிப்படுத்தப்படுகிறது. பகவான் ரமணமஹரிஷிகள், அருணாசலேஸ்வரரைத் தேடிச் செல்லவில்லை. அருணாசலேஸ்வரர்தான் ரமண மஹரிஷிகளைத் தேடிச் சென்றார். சதா அருணை க்ஷேத்திரத்தில் இருந்து வந்த அருணாசலேஸ்வரருக்கு அலுப்புத் தட்டியது போலும். மேலும் பலரும் 'அசலம், அசலம்' – அதாவது 'ஆடாமல் அசையாமல் இருப்பவன்' என்று சொல்லி விட்டனர். சிதம்பரத்தில் உள்ள சித்சபேசனுக்காகவாவது 'ஆடலரசன்' என்று பெயர் உண்டு. இப்படி இருந்த அருணாசலேஸ்வரனுக்கு வெளியில் கிளம்பிச் செல்ல ஆசை வந்தது போலும் என்று தோன்றுகிறது. அவனே திருச்சுழி, மதுரை, விழுப்புரம், மாம்பழப்பட்டு, அரையணிநல்லூர் எனச் சுற்றி மறுபடி யதாஸ்தானத்துக்கு வந்துவிட்டான் போலும்.

இங்கு, 'தேடாதுற்ற திருவருள்நிதி' – தான் தேடாமலே உற்ற திருவருள் நிதி என அண்ணாமலையைக் குறிப்பிடுகிறார். ***'அகத்தியக்கத் தீர்த்தருள்'*** – முந்தய பாடலில் ***'தெய்வமென்றுன்னை .......... சேரவொழித்தாய்'*** தனது வாசனைகளை முற்றிலும் ஒழித்ததாகச் சொல்கிறார். முற்றிலும் வாசனைகள் அழிந்தபின், மனதுக்கு மயக்கம் எப்படி ஏற்படும்? முந்திய பாடலில் வாசனைகள் அழிந்தது என்று சொல்லிவிட்டு, இங்கு 'அகத்தியக்கம்' (தியக்கம் என்றால் மனமயக்கம் என்று பொருள்படும்.) என்று சொல்வது முரண்பாடாக உள்ளதே என்றால், முரண்பாடாக இல்லை. இதைச் சற்றுப் பார்ப்போம்.

வாசனைகள் உள்ள சமயத்தில் தெய்வத்தையோ குருவையோ தரிசனம் செய்வதற்கும், வாசனைகள் அற்ற சமயத்தில் குருவை,

உத்தம மஹாத்மாவைத் தரிசனம் செய்வதில் வித்தியாசமிருக்கும். நாம் ஒரு குருநாதரிடம் சென்று வருகிறோம். அவரைப் பலர் ஞானி என்கின்றனர். நாமும் அவ்வாறே சொல்கிறோம். ஏன்? பலர் சொல்கின்றனர் என்பதனால். உண்மையில் ''நமக்கு, அவர் ஞானியா, இல்லையா என்று தெரியுமா?'' எனில், 'தெரியாது' என்பதே உண்மை. ஏனெனில், நமக்குச் சுய அனுபவமில்லை. மனதின்கண் உள்ள அழுக்குகள் அகன்றால்தான் சுய அனுபவமேற்படும்.

ஒரு பெரிய மஹாத்மாவிடம் நாம் பழகுகிறோம். அவர் மிக சௌலப்யத்துடன் இருக்கிறார். அப்படி அவரிடம் சென்று வரும்பொழுது, அவரின் அனுக்ரஹ பலத்தினாலும், நமது ஸாதனா பலத்தினாலும், ஒருக்கால் நமக்குச் சித்த சுத்தி ஏற்படுமானால், நம்மால் அம்மஹாத்மாவை நெருங்கவே முடியாது. ஏனெனில், சிறிது அனுபவமேற்பட்டால்கூட, இப்படிப்பட்ட மஹாத்மாவா, இவரிடம் எப்படிக் கிட்டே நெருங்கிப் பழகுவது என்று பயம்கூட வரலாம்.

அதுபோல், அருணாசலேஸ்வரன்தான் ரமண மஹரிஷிகளைத் தேடிச் சென்றாலும், அருணாசலேஸ்வரனை நேரில் தரிசனம் செய்த பின்னர், ''இப்படிப்பட்ட ஸ்வாமியான உன்னை, ஞானப் பொக்கிஷமான உன்னை, நான் சுலபத்தில் அடைந்தாலும், உனக்குத் தகுந்தாற்போல் ஒரு பக்தி செய்ய வேண்டுமே, உனது அருளால் அத்தகைய பக்தி ஏற்பட அருள் செய். அப்படி அருள் செய்தால் உன்னை நன்கு புரிந்து கொள்வதோடு மட்டுமின்றி, உனக்குப் பிடித்தாற்போல் பக்தி செய்யவும் முடியும்'' என்று கிலேசப்படுவது (கவலை) போல் ***''அகத்தியக்கந் தீர்த்தருள்''*** என்பது அமைந்துள்ளது.

'தாம் யாருக்கு அருள் செய்ய வேண்டும்' என்று குருவோ, தெய்வமோ நினைக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் அருள் செய்வர். 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்று இதைத்தான் மாணிக்கவாசக ஸ்வாமிகள் திருவாசகத்தில் குறிப்பிடுகிறார். குருவின் அருளின்றிக் குருவைப் புரிந்துகொள்வது இயலாது.

(தொடரும்)

# செய்திகள்

### மார்ச் 15ஆம் தேதி முதல் மே 1ஆம் தேதி முடிய

சென்னை மாநகரின் பல்வேறு இடங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளாசியுடன் 48 நாட்களுக்கு, ''யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் ஜெயகுருராயா'' அகண்ட நாமகீர்த்தனம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது.

### ஏப்ரல் 1ஆம் தேதி முதல் 7ஆம் தேதி முடிய

சென்னை மந்தவெளி, ஸ்ரீ குப்புஸ்வாமி, ஸ்ரீமதி பத்மினி குப்புஸ்வாமி அவர்கள் க்ருஹத்தில் நடைபெற்ற ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள். பூர்த்தி தினத்தன்று மஹாரண்யம் ஸ்ரீ விஷ்ணுராத பாகவதர் குழுவினரால் ''ராதா கல்யாணம்'' மஹோத்ஸவம் நடைபெற்றது.

### ஏப்ரல் 8ஆம் தேதி முதல் 14ஆம் தேதி முடிய

சென்னை நங்கநல்லூர், கோகுலம் மண்டலியினரால் ஸ்ரீநிதிஹாலில் ''ஹரே ராம.....'' மஹாமந்திர நாமகீர்த்தன ஸப்தாஹம் நடைபெற்றது. இதில், திரளான பக்தர்கள் கலந்துகொண்டார்கள். ஏப்ரல் 14ஆம் தேதி பூர்த்தி தினத்தன்று மாலை 6 மணியளவில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டு அருளுரை வழங்கினார்கள்.

### ஏப்ரல் 13ஆம் தேதி

சென்னை அண்ணாநகர், கம்பர் காலனி, Dr. கனகராஜ் அவர்கள் க்ருஹத்தில் இரவு நடைபெற்ற திவ்யநாமகீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

### ஏப்ரல் 14ஆம் தேதி - தமிழ் புத்தாண்டு தினம் - விஷு

சென்னை ப்ரேமிகபவனத்தில், தமிழ்ப்புத்தாண்டை ஒட்டி, ஸ்ரீ ஸ்வாமிஜி அருளாசி வழங்கினார்கள். பஞ்சாங்கபடனம் நடைபெற்றது. சென்னை அண்ணாநகர், கம்பர் காலனி, Dr. கனகராஜ் அவர்கள் க்ருஹத்தில், மஹாரண்யம் ஸ்ரீ விஷ்ணுராதபாகவதர்

குழுவினரால் நடைபெற்ற ராதாகல்யாண மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில் விஷுக்கனி தரிசனம் நடைபெற்றது. உத்ஸவர் ஸ்ரீ பக்தகுதூஹலன் திருமஞ்சனம் கண்டருளினார். உள்வீதி புறப்பாடு நடைபெற்றது. காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை ''ஹரே ராம.....'' நாமகீர்த்தனம் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் மாலை 4 மணியளவில் அருளுரை வழங்கினார்கள்.

### ஏப்ரல் 16ஆம் தேதி, 17ஆம் தேதி

ஸ்ரீ ராமநவமியை ஒட்டி, பெங்களூரில் ப்ராஹ்மண ஸமூகம் சார்பில் நடைபெற்ற ராமகோடி அர்ச்சனை பூர்த்தி விழாவில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள். மஹாரண்யம் ஸ்ரீ விஷ்ணுராத பாகவதர் குழுவினரால் நடைபெற்ற சீதாகல்யாண மஹோத்ஸவத்திலும் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

### ஏப்ரல் 18ஆம் தேதி

ஸ்ரீ ராமநவமியை ஒட்டி மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் மாதுரீஸகீஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு திருமஞ்சனம் செய்தார்கள்.

### ஏப்ரல் 19ஆம் தேதி முதல் ஏப்ரல் 27ஆம் தேதி வரை

ஸ்ரீ ராமநவமியை ஒட்டி சென்னை, அசோக்நகரில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸத்ஸங்கம் நடைபெற்றது.

### ஏப்ரல் 20ஆம் தேதி - ஏகாதசி

மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீ ஸ்வாமிஜி, மாதுரீஸகீஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு திருமஞ்சனம் செய்தார்கள்.

### ஏப்ரல் 26ஆம் தேதி, 27ஆம் தேதி

சென்னை, அசோக்நகரில் மஹாரண்யம் ஸ்ரீ விஷ்ணுராத பாகவதர் குழுவினரால் நடைபெற்ற ஸ்ரீ சீதாகல்யாண மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

27ஆம் தேதி இரவு நடைபெற்ற திவ்யநாமத்திலும், பவ்வளிம்பு உத்ஸவத்திலும் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

**மங்களானி பவந்து**